Registered as a News Paper

பக்கங்கள் 04 வீலை: ரூபா 5-00

நல்லூர் இளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 07 [20-05-93] வியாழக்கிழமை ஓசை 91

## வட பகுதி தபால் பொதிகளுக்கு கட்டணம் செலுத்த கோரிக்கை

யாழ். குடா நாட்டுக்கான சுமார் ஆறாயிரத்துக்கும் அதிகமான தபால் பொதிகள் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக்கிடப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளை குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுவது மேலும் தாமதமடையும் என்றும் தெரியவருகிறது. மேற்படி தபால் பொதிகள் சுங்கத் திணைக்களத்தினூடாகவே எடுத்துவரப்படுவதால் இத் தபால் பொதிகளுக்கு குறிப்பிட்ட கட்டணம் செலுத்தும்படி சுங்கத்திணைக்களம் தபால் திணைக்களத்தைக் கோருகிறது மேற்படி கட்டணம் செலுத்தத் தேவையில்லையென்று தபால் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர். இவ்வாறு இருதரப்பினருக்குமிடையில் நிலவிவரும் கருத்து முரண்பாடு காரணமாக (4ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணியினருக்குள் உடன்பாடு; 3 மாகாண அரசு அமைக்க முடிவு

[கொழும்பு]

தென்னிலங்கை அரசியற் கட்சிகள் தமக்குள் ஓர் உடன்பாட்டிற்கு வந்துள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம் மேல் மாகாணம், தென் மாகாணம், மற்றும் வடமேல் மாகாணங்களில் எதிர்க் கட்சியினர் தமது அரசுகளை அமைக்கலாம் எனத் தெரியவருகின்றது.

கடந்த 17ஆம் திகதி இடம் பெற்ற இரண்டாவதுமாகாண சபைத் தேர்தல்களின் பிரகாரம், ஆளும் அரசாங்க கட்சியானது மேற்குறிப்பிட்ட மூன்று மாகாணங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய அளவில் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறிவிட்டமை தெரிந்ததே.

இந்நிலையில் பிரதான எதிரணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாது போனாலும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து மூன்று மாகாண சபைகளிலும் ஆட்சி அமைக்க முன்வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## 4 வயோதிபப் பெண்கள் இராணுவத்தால் விடுவிப்பு

(வடமராட்சி)

தையிட்டிப் பகுதியில் ஏற்பட்ட சிறிலங்கா இராணுவ சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது கடந்த எட்டு மாதங்களாக சிக்கியிருந்த நான்கு வயோதிபப் பெண்கள் விடுவிக்கப்பட்டு நேற்றுக் காலை 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர்.

தையிட்டியைச்சேர்ந்த செல்லையா ஆச்சிப் பிள்ளை (வயது 68). இளையதம்பி தெய்வானை (வயது 68), சின்னையாசெல்லம்மா (வயது73), முதலித்தம்பி செல்லம்மா (வயது 65) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் அனுசரணையுடன் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கூட்டி (4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசாவின் கொள்கைகளையே அரசு தொடர்ந்து பின்பற்றும்

## புதிய ஜனாதிபதி மீண்டும் வற்புறுத்து

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா சமர்ப்பித்த தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளையே அரசு தொடர்ந்து பின்பற்றும். பல கட்சி முறைக்கு ஊக்குவித்து ஜனநாயக முறை பலப்படுத்தப்படும் என ஜனாதிபதி விஜயதுங்கா நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் ஜனாதிபதிவிஜயதுங்காநேற்று கொள்கை விளக்கஉரை ஆற்றினார். ஊழல், விரயம், அநீதி என்பவற்றை ஒழித்து ஒழுங்கு முறை நிலைநாட்டப்படும்.

ஜனசக்தி, பதினையாயிரம் அபிவிருத்தித் திட்டம், 200 ஆடைத் தொழிற்சாலை திட்டம், பிரதேச செயலக அதிகாரபரவலாக்கம் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி விஜயதுங்கா கூறினார்.

## கேளிக்கைகளை நிறுத்த ஜனாதிபதி பணிப்பு

### செலவைக் குறைக்க திட்டமாம்

(கொழும்பு)

அரச கேளிக்கை நிகழ்ச்சிகள் யாவும் உடனடியாக நிறுத்தப்படும் எனவும் அமைச்சர்களின் பணிகள் யாவும் அரசியல் சட்டத்திற்கமைய கண்காணிக்கப்படும் எனவும் நேற்று ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா அமைச்சரவை கூட்டத்தில் பேசும் போது அறிவுறுத்தினார்.

சகலவிதமான அரச கேளிக்கை நிகழ்ச்சிகளையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்திக் கொள்ளும். அரச வைபவங்கள், செலவு பிடிக்கும்வைப (4ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 23-ம் திகதி காலை 9 மணி முதல் 10 மணிவரை வலிகாமம் தீவக பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டோர் நல்லூர் மங்கயர்க்கரசி மகாவித்தியாலயத்திலும், காலை 11-30முதல் 12-30 வரை பருத்தித்துறை, வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை. சரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டோரும், சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்டோர் சங்கத்தானை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மாலை 3 மணி முதல்

## ஆட்சி அமைக்க அழைக்குமாறு காமினி திசாநாயக்கா கோரிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தமது கட்சி கூட்டு சேர்ந்தது தொடர்பாக தென் மாகாண ஆளுநர் பாக்கீர்முகமட்டிற்கும் வடமேல் மாகாண ஆளுநர் மொண்டேகு ஜயவிக்கிரமவுக்கும் கடித மூலம் அறிவித்திருப்பதாகவும் ஆட்சியை அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை அழைக்குமாறும் தான் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கா பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

பி. பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; வடமேல் மாகாணம் மற்றும் தென்மாகாணங்களில் தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உதவி பெறாது எந்த ஒரு கட்சியும் ஆட்சியை அமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச்சேர தனது கட்சி தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது பற்றி எமது மனதில் இப்போது ஒன்றும் இல்லை. பல புதிய சிந்தனைகளுக்கு இடமிருப்பதாக ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா தமது அறிக்கையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆனால், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக்கட்சியுடன்இணைவது அல்லது ஓர் உடன்பாடு ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. அதுபற்றி நான் யோசிக்கவுமில்லைஎன்று தெரிவித்தார்.

சிறிலங்காவின் அரசியல் உண்மை நிலை பற்றிக் கட்சி நிறைய ஆலோசிக்கவேண்டியுள்ளது. வரும் பாராளுமன்றத் தேர்தலினைப்பற்றி இப்போது கருத்துத் தெரிவிப்பது காலத்துக்கு முந்திய சிந்தனையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பிஅனுப்பசுவிஸ்முடிவு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப அந்நாட்டு அரசு முடிவு செய்திருப்பதாக திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்குப் பின்னர் சுவிட்சர்லாந்து சென்ற தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

மேலும் இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் அகதிகளை கொழும்பில் வைத்து பராமரிக்க சுவிட்சர்லாந்து நிதியுதவி

# முதலமைச்சர்கள் தெரிவில்

முறை பலப்படுத்தப்படும் என ஜனாதிபதி விஜயதுங்கா நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் ஜனாதிபதிவிஜயதுங்காநேற்று கொள்கை விளக்கஉரை ஆற்றினார். ஊழல், விரயம்,அநீதி என்பவற்றை ஒழித்து ஒழுங்கு முறை நிலை நாட்டப்படும்.

## செலவைக் குறைக்க திட்டமாம்

(கொழும்பு)

அரச கேளிக்கை நிகழ்ச்சிகள் யாவும் உடனடியாக நிறுத்தப்படும் எனவும் அமைச்சர்களின் பணிகள் யாவும் அரசியல் சட்டத்திற்கமைய கண்காணிக்கப்படும் எனவும் நேற்று ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா அமைச்சரவை கூட்டத்தில் பேசும் போது அறிவுறுத்தினார்.

சகலவிதமான அரச கேளிக்கை நிகழ்ச்சிகளையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்திக் கொள்ளும். அரச வைபவங்கள்,செலவு பிடிக்கும்வைப

(4ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 23-ம் திகதி காலை 9 மணி முதல் 10 மணிவரை வலிகாமம் தீவக பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டோர் நல்லூர் மங்கயர்க்கரசி மகாவித்தியாலயத்திலும்,காலை 11-30முதல் 12-30 வரை பருத்தித்துறை, வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை, சரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டோரும், சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்டோர் சங்கத்தானை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மாலை 3 மணி முதல் 4 மணிவரையும் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் திரு. வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தமது கட்சி கூட்டு சேர்ந்தது தொடர்பாக தென் மாகாண ஆளுநர் பாக்கீர்முகமட்டிற்கும் வடமேல் மாகாண ஆளுநர் மொண்டேகு ஜயவிக்கிரமவுக்கும் கடித மூலம் அறிவித்திருப்பதாகவும் ஆட்சியை அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை அழைக்குமாறும் தான் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கா பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில்; வடமேல் மாகாணம் மற்றும் தென்மாகாணங்களில் தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உதவி பெறாது எந்த ஒரு கட்சியும் ஆட்சியை அமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச்சேர தனது கட்சி தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது பற்றி எமது மனதில் இப்போது ஒன்றும் இல்லை. பல புதிய சிந்தனைகளுக்கு இடமிருப்பதாக ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா தமது அறிக்கையில் கூறினார். ஆனால், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக்கட்சியுடன்இணைவது அல்லது ஓர் உடன்பாடு ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. அதுபற்றி நான் யோசிக்கவுமில்லைஎன்று தெரிவித்தார்.

சிறிலங்காவின் அரசியல் உண்மை நிலை பற்றிக் கட்சி நிறைய ஆலோசிக்கவேண்டியுள்ளது. வரும் பாராளுமன்றத் தேர்தலினைப்பற்றி இப்போது கருத்துத் தெரிவிப்பது காலத்துக்கு முந்திய சிந்தனையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பிஅனுப்பசுவிஸ்முடிவு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப அந்நாட்டு அரசு முடிவு செய்திருப்பதாக தெரியவருகின்றது.

1992 செப்டம்பர் மாதத்திற்குப் பின்னர் சுவிட்சர்லாந்து சென்ற தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

இவ்வாறான ஒரு முடிவை நோர்வே அரசாங்கமும் எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் அகதிகளை கொழும்பில் வைத்து பராமரிக்க சுவிட்சர்லாந்து நிதியுதவி வழங்கும் என்றும் தெரியவருகிறது.

# தொப்பிகல காட்டில் ஐந்து படையினர் பலி

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதம் முதல் தொப்பிகல காட்டில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் சுமண நடவடிக்கையில் இதுவரை 5 படையினர் பலியானதாக கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நலின் அங்கமன செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்நடவடிக்கை மூலம் தொப்பிகல காட்டின் முன்னரங்கில் 3 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், காட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் பாரிய தளங்களை அழிப்பதே இதன் நோக்கம் எனவும் பிரிகேடியர் அங்கமன கூறினார்.

சுமண இராணுவ நடவடிக்கையில் இரண்டாம் கட்ட நடவடிக்கைதொடர்ந்து தொப்பிகலவில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டு - வாழைச்சேனை வீதி; தினமும் ராணுவ பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் தினமும் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. வீதியின் இருமருங்கும் படையினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும். இதனால் வாரத்தின் ஏழு நாட்களும் அரச வாகனங்கள் பயணம் செய்ய முடியும் என்றும் மேலும் கூறப்படுகின்றது

## காங்கேசன் சென்ற 13 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்

குமண கப்பல் மூலம் நகர கப்பலில் திருக்கோணமலைக்கு செல்வதற்காக நேற்று முன்தினம்பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறை சென்ற 53 உத்தியோகத்தர்களில் 13 உத்தியோகத்தர்கள் காங்கேசன் துறையில்வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

நகர கப்பலில் பயணம் செய்வதற்கு நாற்பதுபேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகவும் மிகுதியான பதின்மூன்றுபேரை ஏற்றிச் செல்ல நகர கப்பல் கப்டன் மறுத்து விட்டதால் மேற்குறித்த உத்தியோகத்தர்கள் சென்ற கப்பலிலேயே பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்றுக்காலை திரும்பி வந்தனர்.

இவர்களில் அநேகமானோர் திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் யுவதிகள் ஆவர். இவ் உத்தியோகத்தர்கள் தமது நிலை குறித்து யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (யோ)

## ஒய்வூதிய வவுச்சர்கள் குமாரியில் வரும்

யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களது மே மாத ஒய்வூதிய வவுச்சர்கள் அடுத்த வாரமளவில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ள 'குமாரி' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது.

இதேவேளை யூன் மாத வவுச்சர்களும் அக்கப்பலில் எடுத்துவரப்படலாமெனவும் கொழும்பில் இருந்து நேற்று 'குமண' கப்பல் மூலம் யாழ். வந்த அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (யோ)

## வாகனம் மோதிய சிறுவன் தலை சிதறிப் பலி

(வடமராட்சி)

வாகன விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் தலை சிதறி ஸ்தலத்திலேயே மரணமானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு அல்வாய் தெற்கு மாலிச்சந்தியில் நடைபெற்றது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த விஜயகுமார் பிரசன்னா (வயது 12) என்ற சிறுவனே பரிதாபகரமான முறையில் மரணமானார். வீதி ஓரமாக படுத்திருந்த இச்சிறுவன் தலை மீது கனரக வாகனம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 29 இல் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

தொலைககல்வி ஆசிரியர்களுக்கான பரீட்சை மற்றும் கல்வி டிப்ளோமோ பரீட்சை, அலுவலக உதவியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சை ஆகியவை இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் "குமாரி" கப்பல்மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

## உலர் உணவுக் கூப்பன் விநியோகம்

(தொல்புரம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுக் கூப்பன்பத்திரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

காரைநகர் மத்தி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான புதிய உணவு முத்திரை இதுவரை பெறாதவர்கள் சுழிபுரம் பிரதான வீதியிலுள்ள அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு காரைநகர்மத்தி கிராமசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். கே. சிவலிங்கம் J/48 கேட்டுள்ளார். (41)

# முதலமைச்சர்கள் தெரிவில் எதிரணிகள் இணக்கம்

### சுத. கட்சிக்கு 2; ஜ. ஐ. தே. முன்னணிக்கு 1

(கொழும்பு)

ஆளும்கட்சி தோல்விகண்ட மாகாணங்களில் எதிரணிகள் கூட்டணி அமைத்து தத்தமது முதலமைச்சர்களைத் தெரிவு செய்துள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா குமாரணதுங்க மாகாணசபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக கடந்த இரவு பி. பி. ஸிக்கு பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.

இப்பேட்டியில் சிறிலங்காவின் மாகாண சபைகளில் ஆட்சி அமைக்கும் நோக்குடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டுச் சேர்ந்துள்ளதைத் தொடர்ந்து வடமேல் மாகாணத்திற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் பிரேமச்சந்திராவும் தென்மாகாணத்திறகு அமரசிறி தொடங்கொடவும்,மேல் மாகாணசபைக்கு சந்திரிகா குமாரணதுங்காவும் தெரிவு செய்யப்பட இணக்கம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைப்பதில் அரசியல் யாப்பு சிக்கல்

### டெய்லி நியூஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணம் மற்றும் தென்மாகாண சபைகளில் எந்தவொரு கட்சியும் ஆட்சி அமைப்பதில் சிக்கல் எழுந்துள்ளது,

சிறிலங்காவில் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது தெரிந்ததே.

இதில் வடமத்திய மாகாணம் மற்றும் தெனமாகாணம் ஆகிய இரு மாகாணங்களுக்கும் நடைபெற்ற தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றவில்லை என்பது தெரிந்ததே.

எனவே இம்மாகாணங்களில் ஆட்சியை அமைக்குமாறு மாகாணசபை ஆணையாளர் எந்தக் கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றாரோ அந்தக் கட்சியே ஆட்சி அமைக்க முடியும். இதன்படி இவ் இரு மாகாணங்களிலும் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியை

மாகாணசபை தேர்தல்கள்

ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் கேட்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஐ. தே. க. ஆட்சி அமைக்கும் பட்சத்தில் எதிரணிகள் புதிய முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரலாம் எனவும் இதன்மூலம்

(4ஆம் பக்கம் பார்க்க)

எதிரணியினரின் வளர்ச்சி

## அதிகாரப் பரவலை ஊக்குவிக்குமாம்

[கொழும்பு]

மாகாணசபைகளில்எதிரணிகளின் செல்வாக்கு அதிகரித்திருக்கின்றமையானது அதிகாரப் பரவலாக்கலை மேலும் ஊக்குவிக்கும் எனவும் ஜனநாயக அமைப்பை பலப்படுத்தும் எனவும் கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## கண்காணிப்பு குழுவின் அறிக்கை நாளை

மாகாணசபைதேர்தல்களை கண்காணிக்க வந்த சர்வதேச கண்காணிப்பாளர்குழு நாளை வெள்ளி தனது இறுதி அறிக்கையை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கும் குழுவினர் தற்போது தாம் கண்டவை, அறிந்தவை குறித்து அறிக்கை தயாரித்து வருகின்றனர்.

10 நாடுகளைச் சேர்ந்த 25 பேர் கொண்ட இக்குழு தேர்தல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றதாக ஏற்கனவே உத்தியோகபூர்வமற்ற முறையில் அறிவித்துள்ளமை தெரிந்ததே.

## கிராமசேவையாளர் பதவி; நியமனத்தில் புதிய சிக்கல்

யாழ். குடாநாட்டில் கிராம சேவையாளர்களை நியமிப்பதில் புதிய சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

போட்டிப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்பட்டவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கார்கசற் றேடியோக்களா கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/6584)

### தவறிவிட்டது

நாகலிங்கம் சின்னம்மா அல்லது தங்கம்மா ஆகிய எனது அடையாள அட்டை (356112512V) பிறவுண் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (4906)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்காக நல்ல கலவையில் அரியப்பட்ட பழைய பூச்சட்டிகள் விற்பனைக்குண்டு ஐ கே நடேசன் ''நந்தினி வாசா'', 15, மகேந்திரன் வீதி, அரியாலை. (4925)

### நன்றி

எனது சம்பளபபணத்தை தவறவிட்டுத் தவித்திருக்கையில் அதைக்கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த எக்காளத்தொனிசபை லாசரஸ் ச. இரத்தினசிங்கம் அவர்களுக்கு எனது நன்றி.

நா. வீரபாண்டியதாசன்
(ஆசிரியர்)
[4922]

### ஹெலி நோட்டம்

## விளை. உத்தியோகத்தர் வெற்றிடம் நிரப்பப்படும்

யாழ் மாவட்டத்தில் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெகுவிரைவில் இவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குள் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணசபையின் விளையாட்டுப் பணிப்பாளர் மரியதாஸ் இவ்வாறு தெரிவித்தார். (42)

## அறிவித்தல்

### ஈழத்து நூல் சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்தமருத்துவக் கண்காட்சி 1993

### அனைத்துப் புகைப்படக் கலைஞர்களினதும் கவனத்திற்கு

இக்கண்காட்சியில் பங்குபற்றும் புகைப்படங்கள் சம்பந்தமாக போட்டியொன்றினை நடாத்திப் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காட்சியிலும் போட்டியிலும் வைக்கப்படும் புகைப்படங்கள் சம்பந்தமாக அளவிலும் நிறத்திலும், எவ்வித கட்டுப்பாடும் இல்லை. 31 05-93ஆம் திகதிக்கு முன்னர் எம்மோடு தொடர்பு கொள்ளும புகைப்படக் கலைஞர்களும் நிறுவனங்களும் மட்டுமே இப்புகைப்படக் கண்காடசியில பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவர் என்பதனையும் அறியத்தருகிறேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம / இணைப்பாளர் கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 93-05-18 (சி/6047)

## 1-ம் ஆண்டு நினைவு

மழலையாய்
16-11-1968

மாவீரனாய்
30-05-1992



### லெப். நற்குணம்/நிரோஜன்

[சண்முகநாதன் யோகநாதன்]
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைபபிரிவு)
திதி:- 20-05-93

செந்தமிழ் மண்ணிலே வரலாறு படைத்திடும்
காவிய நாயகர் வரிசையில் .........
யோகா!
உணர்வுக்குள் உன்னை உரிமை கொண்டாட
உதவியது உன பேச்சு

## மெய்வல்லுநர் போட்டிகள் ஜூன் நடத்தப் பணிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டிகளை கொத்தணி மட்டத்தில் 10-06-93க்கு முன்பாகவும். கோட்டமட்டப் போட்டிகளை 25-06-93க்கு முன்பாகவும் நடாத்திமுடிக்குமாறு யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு இரா.சுந்தரலிங்கம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

31 12-93ந் திகதியைக்கருத்திற்கொண்டு இப்போட்டியில் பங்குபற்றுவோர்களின் வயது தீர்மனிக்கப்படும் என்றும் 7 தொடக்கம் 11 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் நடாத்தப்படும் எனவும், இடம்பெயர்ந்த மாணவர்கள் தற்போது கற்கும் பாடசாலை சார்பாகவே இப்போட்டிகளில் பங்கெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டப் போட்டிகள் 15, 17, 19 வயதுக்குட்பட்டோருக்கு நடாத்தப்படும் எனவும், ஒரு போட்டியாளர் அஞ்சலோட்டம் தவிர்ந்த மூன்று நிகழ்ச்சிகளில் மட்டுமே போட்டிகளில் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (17)

### மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம் கொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில்முதன்மை விருந்தினராக திருமதி புஸ்பா கணேசலிங்கம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் சாவகச்சேரி) அவர்களும் சிறப்பு விருந்தினராக க.பேரம்பலம் (உதவிக்கல்விப்பணிப்பாளர்-சாவச்சேரி) அவர்களும் விசேடவிருந்தினர்களாக விமல் (வட்டப் பொறுப்பாளர் கொடிகாமம்) அருளாளன் உதவிப் பொறுப்பாளர் மாணவர் அமைப்பு தென்மராட்சி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்

### வைகாசிப்பொங்கல்

மூகாவில் இயக்கச்சிப்பகுதியில் அமைந்திருக்கும் திரியாய் அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா நாளை மறுதினம்சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

### பாராட்டு

(தென்மராட்சி)

சாவகச்சேரி இத்தியடி வீரசுத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் போது இளங்கலைஞர்கள் ஆலய பரிபாலன சபையால் கௌரவிக்கப்பட்டனர். திரு. வீரசிங்கம் ரமேஸ் (பாபு) என்பவருக்கு ''இளந்தவில் கலைஞன்'' என்ற பட்டமும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டதோடு அவரது குழுவினரான ச. ரமணன் சி. சிவரஞ்சன், இ. சிவசாமி ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது (மு)

### உபகரணங்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி இன்ரரக்ட் கழகத்

### தமிழ்மொழி பரிசில் பரீட்சை

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ்மாமன்றத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் ''தமிழ் மொழி பரிசில்'' என்ற பரீட்சையினை இரண்டாவது வருடமாக நடாத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பரீட்சை சம்பந்தமான சுற்று நிருபங்கள் மிகவிரைவில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என மன்றத்தின் பொதுச்செயலாளர் செல்வன் செ. ஜிதேந்திரகுமார் தெரிவித்துள்ளார். (24)

### தமிழ் விழா

மாற்றம் சஞ்சிகை நிதிக்காக தமிழ்த்தாய் மன்றம் நடாத்தும் மாபெரும் தமிழ் விழா தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டத்தில் இன்று பி ப. 5.00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் நகைச்சுவை நிகழ்ச்சி பட்டிமன்றம், மாற்றம் சஞ்சிகை வெளியீடு, பரதநாட்டியம், இசைக்கச்சேரி, நாடகங்கள் ஆகியன இடம்பெறவுள்ளதாக மன்றப் பொதுச்செயலாளர் மல்லிகைமைந்தன் தெரிவித்துள்ளார்.

### கடனுதவி

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் இருக்கும் கஷ்டப்பட்ட மக்கள் சுயதொழில் செய்து முன்னேறுவதற்காகவும் குடும்பத்தினரைக் கஷ்டமின்றி பாதுகாப்பதற்காகவுமாகதலாஇரண்டா

### டிப்ளோமா பயில வாய்ப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறியை கற்ற மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்து டிப்ளோமா கற்கை நெறியை தொடரும் நடவடிக்கையில் யாழ் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கற்கை நெறியைப் பயில தொழிலாளர் கற்கைநெறி இறுதிப் பரீட்சையில் சாதாரண சித்தி பெறுபவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும்அறியப்படுகிறது.(17)

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

பெரியரசடி, சாவகச்சேரியிலமைந்துள்ள கப்டன் அஜித்தா. மதுரா இலவச பாடசாலையின் வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை தாமோதரம்பிள்ளை வீதியிலமைந்துள்ள மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தமிழீழ தேசியக் கொடியை தென்மராட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவரமைப்புப் பொறுப்பாளர் திரு. சங்கர் ஏற்றிவைத்தார்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-20

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ எஸ். மயில்வாகனம் (புலிபாய்ந்தகல், கிரான்-மட்டு.)

1987ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியுமான,

**லெப். கேணல் ராஜா** (கனகசபாபதி ஹரிச்சந்திரா- ஹரிச்சந்திரா வீதி, வண்ணார்பண்ணை மேற்கு - யாழ்ப்பாணம்)

யாழ் - அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கோமெஸ்** (இரத்தினம் தவராசா- நாவற்காடு. அச்சுவேலி தெற்கு- யாழ்)

1988ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**பைரவன்** (இளையதம்பி கதிரவன் - வந்தாறுமூலை - மட்டு.)

யாழ் - வல்வெட்டித்துறை மானாங்கனை ஊறணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட நேரடிச் சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கப்டன் ரமேஸ் மாஸ்ரர்** (பொன்னையா சிவஞானசுந்தரம் - நவிண்டில் வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்.)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ஜீவா** (தம்பிராசா சத்தியமூர்த்தி-பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி வல்வெட்டித்துறை- யாழ்.)

**ஜெயம்** (துரைசிங்கம் சிறீதரன் - மானாங்கனை, வல்வெட்டித்துறை - யாழ்.)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1989ஆம் ஆண்டு மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் அமலன்** (அலோசியஸ் அமலதாஸ் - காத்தான்குளம், அடம்பன்-மன்னார்)

**கப்டன் குலம்** (பொன்னுத்துரை யோகராசா (ரவி) செல்வபுரம், பூநகரி - மன்னார்)

**கப்டன் புதுமை** (பொன்னுச்சாமி வரதகுமார்-வாமதேவபுரம், அடம்பன் - மன்னார்)

வீட்டுப் பாவனைக்காக நல்ல கலவையில் அரியப்பட்ட பழைய பூச்சட்டிகள் விற்பனைக்குண்டு ஐ கே நடேசன் ''நந்தினி வாசா'', 15, மகேந்திரன் வீதி, அரியாலை.

(4925)

## நன்றி

எனது சம்பளபபணத்தை தவறவிட்டுத் தவித்திருக்கையில் அதைக்கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த எக்காளத்தொனிசபை லாசரஸ் ச. இரத்தினசிங்கம் அவர்களுக்கு எனது நன்றி.

நா. வீரபாண்டியதாசன்
(ஆசிரியர்)

[4922]

### ஹெலி நோட்டம்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று முன்தினம செவ்வாய்க் கிழமை காலை 11மணியளவில் எழுதுமட்டுவாள், கிளாலி, முகமாலை, பளை போன்ற இடங்களை சுற்றிநோட்டம் இட்டுச் சென்றது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர். (86)

மழலையாய்
16-11-1968

மாவீரனாய்
30-05-1992



## லெப். நற்குணம்/நிரோஜன்

[சண்முகநாதன் யோகநாதன்]

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைபிரிவு)

திதி:- 20-05-93

செந்தமிழ் மண்ணிலே வரலாறு படைத்திடும்
காவிய நாயகர் வரிசையில் .........
யோகா!
உணர்வுக்குள் உன்னை உரிமை கொண்டாட
உதவியது உன பேச்சு
கனவுக்குள் உன்னை காண்கிறோம்
கவலையடைகிறது எம் நெஞ்சு
காலம் உன்னை மறைத்தது
காண்கிறோம் உன் செயல்
பார்பவர்கள் கண்ணுக்கு படமாகதொங்குகிறாய்
ஆழ்ந்து பார்த்தால் அழுகைவரும்
அறிவுக்கு அந்நேரம் இடம் இல்லையே--யோகா!

770 பருத்தித்துறைவீதி,
நலலூர், யாழ்ப்பாணம். (4917)

உன்நினைவால் வாடும்
குடும்பத்தினர்

### பாராட்டு

(தென்மராட்சி)

சாவகச்சேரி இத்தியடி வீரசக்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் போது இளங்கலைஞர்கள் ஆலய பரிபாலன சபையால் கௌரவிக்கப்பட்டனர். திரு. வீரசிங்கம் ரமேஸ் (பாபு) என்பவருக்கு ''இளந்தவில் கலைஞன்'' என்ற பட்டமும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டதோடு அவரது குழுவினரான ச. ரமணன், சி. சிவரஞ்சன், இ. சிவசாமி ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது

(மு)

### உபகரணங்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி இன்ரரக்ட் கழகத்தினர் அரியாலை அன்பகம் சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் பலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வின் போது இங்குள்ள சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றது.

(24)

விழா தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டத்தில் இன்று பி ப. 5.00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் நகைச்சுவை நிகழ்ச்சி பட்டிமன்றம், மாற்றம் சஞ்சிகை வெளியீடு, பரதநாட்டியம், இசைக்கச்சேரி, நாடகங்கள் ஆகியன இடம் பெறவுள்ளதாக மன்றப் பொதுச்செயலாளர் மல்லிகை மைந்தன் தெரிவித்துள்ளார்.

### கடனுதவி

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் இருக்கும் கஷ்டப்பட்ட மக்கள் சுயதொழில் செய்து முன்னேறுவதற்காகவும் குடும்பத்தினரைக் கஷ்டமின்றி பாதுகாப்பதற்காகவுமாகதலாஇரண்டாயிரம் ரூபா வீதம் மீளளிப்புக் கடனாக கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கி வருவருகிறது.

இதுவரை சுமார் 180 சுயதொழிலை செய்வதற்கான மீளளிப்புக் கடனை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் பெற்று சுயதொழில் செய்து வருகின்றனர். (42)

வெய்திய-

கப்டன் ரமேஸ் மாஸ்ரர் (பொன்னையா சிவஞான சுந்தரம் - நவிண்டில் வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்.)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். ஜீவா (தம்பிராசா சத்தியமூர்த்தி-பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி வல்வெட்டித்துறை- யாழ்.)

ஜெயம் (துரைசிங்கம் சிறீதரன் - மானாங்கனை, வல்வெட்டித்துறை - யாழ்.)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1989ஆம் ஆண்டு மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் அமலன் (அலோசியஸ் அமலதாஸ் - காத்தான்குளம், அடம்பன்-மன்னார்)

கப்டன் குலம் (பொன்னுத்துரை யோகராசா (ரவி) செல்வபுரம், பூநகரி - மன்னார்)

கப்டன் புதுமை (பொன்னுச்சாமி வரதகுமார்-வாமதேவபுரம், அடம்பன் - மன்னார்)

கப்டன் சபேசன் (சீமான் இமானுவேல் இராசரட்ணம்- பரியாரி கண்டல், முருங்கன்-மன்னார்)

லெப். நாயுடு (கஸ்பார் ஜெயசீலன் - பள்ளக்கமம், முருங்கன் - மன்னார்)

லெப். மாக்ஸ் (பத்மநாபன் சசிக்குமார் - தட்சணாமருதமடு, மடுக்கோயில் - மன்னார்)

லெப். கர்ணன் (கிட்ணன் சிவகுமார்-10-ம்கட்டை, நல்லூர், பூநகரி - கிளி)

2-ம் லெப். சிவம் (ஆபிரகாம் முருகையா - கள்ளிமோட்டை, முருங்கன்-மன்னார்)

வீமன் (பிலிப் றோச் நிரஞ்சன் - சாவற்காடு-மன்னார்)

பீற்றர் (செபஸ்தியாம்பிள்ளை சகாயராசா - கருங்கண்டல், வண்ணாங்குளம், அடம்பன்-மன்னார்)

லெப். சுரேஸ் (சண்முகம் சத்தியசுரேஸ்- கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு-யாழ்.)

யாழ் - சுதுமலையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

செந்தில் (முருகேசு டொமினிக் 4-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்.)

இதே பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

திருமலை - நிலாவெளிப்பகுதியில் கோயில் திருவிழாவில் கலந்து கொண்ட மக்கள் மீது தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டு- படுவான்கரை, திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு- வாழைச்சேனை கிண்ணியடியில் இனம் தெரியாதோரால் தந்தை உட்பட 5குழந்தைகள் வெட்டிக்கொலை.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6648)

# 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
22 - 12 - 1956



தாயக மீட்பில்
20 - 05 - 1987

## லெப். கேணல் ராதா

(கனகசபாபதி ஹரிச்சந்திரா)

[ முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும்; யாழ் மாவட்டத் தளபதியும் ]

செந்தமிழ் ஈழத்தின் செழுமை தனைச் சிதைத்து - எம்
செங்குருதியினை குடிக்க நினைக்கும்
சிங்களப் படைகளின் இனவெறி அடக்கிட
செங்களமாடிய சிறுத்தைப் புலியே - எங்கள் ராதாவே
மண்ணின் விடுதலைக்காய் மாவீரர் ஆன உம்மை
எண்ணி நாம் ஏற்றம் கொள்வோம்
எழிலான நம் தேசம் மீட்போம்.

சிவன் வீதி,
உரும்பராய்

(4899)

- நண்பன்
மாத்தளை

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தளபதிலெப். கேணல்ராதா

(கனகசபாபதி ஹரிச்சந்திரா)

வீரப்பிறப்பு:
22-12-1956

வீரச்சாவு:
20-05-1987

மாவீரர் சோலையிலே—கூடி
மணக்கின்ற மலரே ராதா
வாராதா விடுதலையென்று—அன்று
சோராத படையினில் புகுந்தாய்
வேராக நீ நின்று மண்ணில்—பெரும்
வீறான புகழ் பூத்துச் சென்றாய்
மாளாத நின் வழியில் பொறியுடன்—இன்னும்
போராடும் உன் முளைப்புக்கள்
பார் ராதா தமிழ் ஈழக் கொடியை—யாரும்
வீழ்த்தாத உயரத்தில் ஏற்றிடுவார்.

15, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

—குடும்பத்தினர்

(4921)

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்



சிந்தனைக்கு

அபத்தம் ஆட்சி செய்யும் அவலத்திற்கு அடங்கி வாழும் அவசியம், உயிரினத்தில் மனிதனைத் தவிர வேறு எதற்கும் கிடையாது.

— தாமஸ் ஹாப்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மாகாண சபையால் புதிய சிக்கல்

ஒரு பெரும் நெருக்கடியின் தீர்வாக கொண்டு வரப்பட்ட மாகாண சபைகள், அந்த நெருக்கடியைத் தீர்க்காத அதேவேளை புதிய நெருக்கடியை உருவாக்கும் ஒன்றாகத் தற்பொழுது மாறியுள்ளது. இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இதற்குப் பெரும் காரணமாக அமையப் போகின்றன.

மாகாண சபைத் தேர்தலில் எதிர்க் கட்சியினர் சில மாகாண சபைகளை, அதிலும், மேல் மாகாண சபையைக் கைப்பற்றி உள்ளமையே இப்புதிய நெருக்கடியின் தோற்றத்திற்கு முக்கிய காரணம். இந்நெருக்கடியினால் அரசியலமைப்பு, பொருளாதார நடவடிக்கைகள், நிர்வாகச் சிக்கல்கள் வரை பெரும் நெருக்கடிகள் உருவாகக் கூடும்.

1987 இல் இலங்கை – இந்திய சமாதான உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. பேச்சளவில் அதிகாரங்கள் பலவற்றை மாகாண சபைக்கு அரசாங்கம் வழங்குவதாக அறிவித்திருந்த போதிலும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருந்து பகிர்ந்தளிக்கப்படவில்லை. மாறாக இடைக்கிடை மாகாணங்களுக்கு வழங்கப்பட்டதாக அறிவித்திருந்த சில அற்ப அதிகாரங்களில் கூட தலையிட்டும், சில வற்றை மீளப் பெற்றும் வந்தன.

ஆனால் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின் வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு ஒரு பொம்மை அரசாங்கமும் – இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் – ஏனைய மாகாணங்கள் ஏழிலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டன. இதனால் மாகாண சபையின் அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பெரும் சர்ச்சைகள் எழவில்லை.

இந்நிலையில் தற்பொழுது எதிர்க்கட்சிகள் சில மாகாணங்களைக் கைப்பற்றியுள்ளமை என்பது மத்திய – மாகாண அரசுகளுக்கிடையில் அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பலமான ஒரு

# சிறிலங்காவின் மாகாண சபைத் தேர்தல்

## ஒரு கண்ணோட்டம்

சிறிலங்காவின் ஏழு மாகாணங்களிலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்பார்க்கப்பட்டதுபோல பெருமளவு வன்செயல்கள் மற்றும் களேபரங்கள் என்பன இல்லாமல் ஓரளவுக்கு சுமுகமாக நடந்து முடிந்துவிட்டது. மாகாணசபை அமைப்பு முறையிலான அதிகாரப் பரவலாக்கலை இந்த ஏழு மாகாணங்களிலும் உள்ளோர் கோரி நிற்கவில்லை என்றாலும் நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசிவது போல இறந்து போன இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குறைப் பிரசவமான மாகாணசபைகள் அமைப்பு இப்போது ஒரு முக்கிய கட்டத்தை எட்டி நிற்கின்றது. இந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் முடிவுகள் பல்வேறு கேள்விகளை எழுப்பி இருப்பதுடன் தென்னிலங்கை அரசியலில் இதுவரை நிலவி வந்த உறுதிப்பாட்டையும் குலைத்துக் காட்டியிருக்கின்றது. எனவே பழைய பிரச்சினைகளுக்கு புதிய அணுகு முறையிலான சிந்தனைப் போக்குகளும், புதிய முன் முயற்சிகளும் தேவை என்பதை இத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன என்பது மிகையானதல்ல.

மேலும் ஒரு சிலருக்குப் பதவியும், அந்தஸ்தும், பஜிரோவும், ஆயுதப்பாதுகாப்பும் வழங்குவதே மாகாணசபை அமைப்பின் கடமையாக இருக்கும் என்று இதுவரை கருதப்பட்ட போக்கு இனியும் நடைமுறைச் சாத்தியமாக இருக்காது என்பதும், இச் சபைகளுக்கு உண்மையாகவே வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் யாவை என்பதையும், இந்த அமைப்பு முறையின் நடைமுறைச் சாத்தியப்பாடு எத்தகையது என்பதையும் இனி வரும் காலம் எடுத்துக்காட்டும் என்பதற்கு இத் தேர்தல் முடிவுகள் கட்டியம் கூறுகின்றது எனலாம்.

### ஐ. தே. கவிற்கு பெரும் தோல்வி

தலைநகரமும், பொருளாதார வர்த்தகமையமும், உள்ளடங்கிய மேல் மாகாணத்தில் தோல்வி கண்டதால் மட்டுமன்றி மற்றும் பல வழிகளிலும் ஆளும் ஐ தே.க. பெரும் தோல்வியையே இத் தேர்தலில் சந்தித்துள்ளது. 1977ம் ஆண்டில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதில் ஆரம்பித்து கடந்த பதினாறு ஆண்டுகளிலும் பல்வேறு தேர்தல்களிலும் சந்தித்திராத பெரும் தோல்வி இது என்பது முதலில் கவனிக்கத் தக்கது எதிர்க்கட்சிகளைப்பல வீனப்படுத்தியும், தேர்தல்களின் போது முறைகேடுகளில் ஈடுபட்டும் ஆளும்கட்சி வெற்றி பெற்றதாக இருந்த போதும் கடந்த காலங்களில் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதிலும், அரசியல் உறுதியைப் பேணுவதிலும் ஐ.தே.க. வெற்றி கண்டு வந்த போதும் இந்தத் தேர்தல்கள் ஐ. தே. க வின் செல்வாக்கு சரிந்து போயிருப்பதை தெளிவாகக் காட்டுவதாக உள்ளது.

இரண்டாவதாக பிரதமர், ரணில்விக்கிரமசிங்கவின் பியகம தொகுதி உட்பட பல முக்கியஅமைச்சர்களின் தேர்தல் தொகுதிகளிலே கூட ஆளும் ஐ. தே. க. தோல்விகளைச்சந்தித்திருப்பது சாதாரணமானதல்ல. இது அவர்களின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு என்பதை கேள்விக்கு உள்ளாக்கியிருப்பது ஒரு புறம் இருக்க கடந்த கால ஐ. தே. க. ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை எடுத்துக் காட்டும் ஒரு அளவு கோலாகவும் கொள்ளப்படலாம்.

அடுத்து நான்கு மாகாணங்களில் முன்னணியில் இருப்பதாக ஐ. தே க. திருப்திப்பட்டுக் கொண்டாலும் கூட பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பெற்ற வாக்குகளை கூட்டிப்பார்த்தால் ஐ. தே க. விற்கு எதிரான வாக்குகள் ஐம்பது சதவிகிதத்திற்கும் அதிகமாக இருப்பதைக் காணலாம். இந்த அம்சம் எதிர்வர இருக்கும் தேர்தல்களில் ஐ.தே. க.விற்கு பலத்த பின்னடைவைக் கொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இளையவன்

இந்தத் தேர்தல் முடிவுகளில் கவனிக்கப்படக்கூடிய மற்றுமொரு முக்கிய அம்சம் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதிகளிலும் மாவட்டங்களிலும் ஐ தே. க பின்தங்கிய நிலையிலிருந்த அதேசமயம் இந்திய வம்சாவழியினர் பெரும்பான்மையாகவாழும் மலையகத்தை உள்ளடக்கிய மத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், ஊவா மாகாணம் மற்றும்முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் புத்தளம் போன்ற மாவட்டங்களிலும் ஐ. தே. க அமோக வாக்குகளைப் பெற்றுள்ளது ஆகும். அதாவது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினது ஆதரவும், ஐ. தே. கவினுள் இருக்கும் முஸ்லிம்களின் செல்வாக்கும் தான் ஐ.தே.கவைபடுதோல்வி என்பதிலிருந்து பாதுகாத்து இருக்கின்றது என்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாக்குகின்றன.

### ஜ' ஐ. தே. முன்னணியின் அரசியல் செல்வாக்கு

சர்ச்சைக்கு உரியதான அரசியல் குற்றவிசாரணைகோரும் பிரேரணையைத் தாக்கல்செய்வதற்கு காரணமானவர்கள் என்பதால் ஐ.தே.கவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணிதனது முதலாவது பலப்பரீட்சைக் களத்தின் மூலம் மூன்றாவது சக்தியாக-தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பின்னுக்கு தள்ளி அரசியலில் பிரதான எதிர்க்கட்சியாகவும், பல மாகாணங்களில் ஆளும் கட்சியாகவும் வரலாம் என்று ஜ. ஐ. தே. மு. எதிர்பார்த்த போதும், அதன் தலைவர் லலித் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அது மூன்றாவது சக்தியாகவே இனங்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் லலித் உயிருடன் இருந்திருந்தால் இத்தேர்தல் முடிவுகள் எப்படி இருந்திருக்கும் என்று எதிர்வு கூறுவதுகடினம்தான் ஆயினும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் பெற்ற வாக்குகள் பெரும்பாலும் காலம் காலமாக ஐ. தே. கவிற்கு கிடைத்த வாக்குகளே என்பது புலனாகின்றது. அதாவது பெரும்பாலும் ஐ.தே.க வின் அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே ஆதரிக்கும் ஜ.ஐ தே. மு. பெற்ற வாக்குகள் ஐ தே. கவின் பிரேமதாசா எதிர்ப்பு வாக்குகளே எனலாம். ஆனால், லலித் இல்லாத ஜ. ஐ தே. மு.வும், பிரேமா இல்லாத ஐ. தே. கவும் தத்தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்கான பலப்பரீட்சைக்களத்தில் தேறியிருக்கின்றன என்றே கொள்ளலாம்.

### பொதுஜன முன்னணி

1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பெரும்பாலும் தோல்விகளையே தழுவிவந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது 'கை' சின்னத்தையும் தியாகம் செய்து 'பொதுஜன முன்னணி' என்ற பெயரால் அமைத்த கூட்டணி ''கதிரை'' யைப் பெற்றுக் கொண்டுவிட்டது. இந்தத் தேர்தலின் மற்றுமொரு முக்கிய அம்சம் ஆகும். மேல் மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பதுடன், மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஆளுங்கட்சிக்கு சவாலாகவும் உருப்பெற்றுள்ளது. இதன்மூலம் இன்னமும் இருபத்தைந்து வருடங்களுக்சாவது சுதந்திரக் கட்சி ஆட்சிஅமைக்கமுடியாதுஎன்று ஐ.தே. கவினர் போட்டிருந்த கணக்கைத் தவிடு பொடியாக்கியிருக்கின்றது. தொடர்ந்து பல தேர்தல்களில் தோல்வியையே பெற்றுக் கொண்ட போதும் சுதந்திரக் கட்சி மக்களிடையே தனது செல்வாக்கை இன்னமும் இழந்துவிடவில்லை என்பதையும், அதனுடைய பலம் அரசுக்கு ஒரு சவால் என்பதையும் இத் தேர்தல் நிரூபித்துள்ளது.

### புதிய சக்திகள்

விஜய குமாரணதுங்கவின் பிரேதப் பெட்டி மீது கை வைத்து ஐக்கிய சோசலிசக் கூட்டணியைக் காப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்த சந்திரிகா குமாரணதுங்க பொது ஜன முன்னணி மூலம் கதிரையைப் பிடிக்க இத்தேர்தல் உதவியிருக்கின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும்; மாகாணசபை ஆட்சியமைப்பு இரத்துச் செய்யப்பட வேண்டும்; பாராளுமன்றம் தான்நாட்டின் அதியுயர்ஆட்சி பீடமாக இருக்க வேண்டும்; என்றவாறான பல விடயங்களிலும் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம் தொடர்பாகவும் வித்தியாசமான ஆனால் தீவிரமான கருத்துக்களைக் கொண்டிருப்பவராகக் கருதப்படும். திருமதி சந்திரிகா ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருப்பதும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

எது எவ்வாறாயினும் சிறிலங்காவின் ஏழு மாகணங்களிலும் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தல் தென்னிலங்கையில் அரசியல் உறுதிப்பாடு குறுகிய எதிர்காலத்திற்கு நிலவாது என்பதைக் கட்டியம் கூறப்போதுமானதாகும்.

# மேற்காசிய பேச்சுக்களில்

மாகாணசபைத்தேர்தலில்

## எந்தநிர்பந்தமும்இருந்ததை காண முடியவில்லை

யறுக்கப்படவில்லை. பேச்சளவில் அதிகாரங்கள் பலவற்றை மாகாண சபைக்கு அரசாங்கம் வழங்குவதாக அறிவித்திருந்த போதிலும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருந்து பகிர்ந்தளிக்கப்படவில்லை. மாறாக இடைக்கிடை மாகாணங்களுக்கு வழங்கப்பட்டதாக அறிவித்திருந்த சில அற்ப அதிகாரங்களில் கூட தலையிட்டும், சிலவற்றை மீளப் பெற்றும் வந்தன.

ஆனால் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபின் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒரு பொம்மை அரசாங்கமும் - இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் - ஏனைய மாகாணங்கள் ஏழிலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டன. இதனால் மாகாண சபையின் அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பெரும் சர்ச்சைகள் எழவில்லை.

இந்நிலையில் தற்பொழுது எதிர்க்கட்சிகள் சில மாகாணங்களைக் கைப்பற்றியுள்ளமை என்பது மத்திய - மாகாண அரசுகளுக்கிடையில் அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பலமான ஒரு மோதல் நிலை உருவாகும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். இது குறித்துப் பதவிக்கு வரும் முன்பே தேர்தல் பிரசாரங்களின் போதே சில அறிவிப்புக்களையும் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ளன. மாகாண அரசாங்கத்தைக் கைப்பற்றுமிடத்து அவற்றிற்குக்கீழ்ப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களைக் கலைத்துவிட்டுத் தேர்தல்கள் நடத்தப்போவதான அறிவிப்பு முக்கியமானதாகும்.

இவ்வாறாகஎதிர்க்கட்சிகள்அதிகாரங்களைபயன்படுத்த முற்படும் வேளையில் இதனால் ஏற்படப்போகும் பிரச்சினைகள் பெரும் பூகம்பமாகவே வெடிக்கலாம். இதில் 1988, 89ஆம் ஆண்டில் இருந்து மேல் மாகாணத்திலும், தென் மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் இடம்பெற்ற பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர் கொலைகள் பற்றிப் புதிய விசாரணைகள் ஆரம்பிக்க உத்தரவிடப்படலாம். இதில் ரிச்சாட் டீ சொய்சாவின் கொலையில் இருந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் கொலை வரை ஆராயப்படலாம்.

இது ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம். இதற்கு மாறாக மாகாண சபைகளின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முற்படுமானால் அரசியலமைப்பு குறித்துப் பெரும் சர்ச்சைகள் எழக் கூடும்.

மேலும், மாகாண சபை – மத்திய அரசிற்கிடையிலான அதிகார வரையறைகள் தெளிவின்மை காரணமாக அரசாங்கநியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் என்பனகுறித்துதலையீடுகள், குறுக்கீடுகள் பற்றியும் பலத்த சர்ச்சை எழலாம். மாகாண அரசின் சிபார்சுகளை மத்திய அரசு நிராகரிக்கலாம். மத்திய அரசின் பணிப்புக்களை மாகாண அரசு புறக்கணிக்கலாம். இவை மாகாண அரசுகள் கலைப்புக்கள் தொடர்பான விவகாரங்கள் வரை செல்லலாம்.

ஒருவகையில் பார்க்கப்போனால் இந்நெருக்கடி நகைப்பிற்கிடமானதே. மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் தமிழருக்கு அதிகாரங்களைத் தாரைவார்த்ததாக அமைந்துவிடும் எனக் கூறிய எதிர்க் கட்சிகள் இன்று அதே அதிகாரத்திற்காகப் போராட்டம் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளன. இதற்கு யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்?

கும் என்று இதுவரை கருதப்பட்ட போக்கு இனியும் நடைமுறைச் சாத்தியமாக இருக்காது என்பதும், இச் சபைகளுக்கு உண்மையாகவே வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் யாவை என்பதையும், இந்த அமைப்பு முறையின் நடைமுறைச் சாத்தியப்பாடு எத்தகையது என்பதையும் இனி வரும் காலம் எடுத்துக்காட்டும் என்பதற்கு இத் தேர்தல் முடிவுகள் கட்டியம் கூறுகின்றது எனலாம்.

ஐ. தே. க. தோல்விகளைச சந்தித்திருப்பது சாதாரணமானதல்ல. இது அவர்களின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு என்பதை கேள்விக்கு உள்ளாக்கியிருப்பது ஒரு புறம் இருக்க கடந்த கால ஐ. தே. க. ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை எடுத்துக் காட்டும் ஒரு அளவு கோலாகவும் கொள்ளப்படலாம்.

அடுத்து நான்கு மாகாணங்களில் முன்னணியில் இருப்பதாக ஐ. தே. க. திருப்திப்பட்டுக் கொண்டாலும் கூட பொது ஜன ஐக்கிய முன்னணி என்பதிலிருந்து பாதுகாத்து இருக்கின்றது என்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாக்குகின்றன.

### ஜ' ஐ. தே. முன்னணியின் அரசியல் செல்வாக்கு

சர்ச்சைக்கு உரியதான அரசியல் குற்றவிசாரணைகோரும் பிரேரணையைத் தாக்கல்செய்வதற்கு காரணமானவர்கள் என்பதால் ஐ.தே.கவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களால் என்றே கொள்ளலாம்.

### பொதுஜன முன்னணி

1977ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பெரும்பாலும் தோல்விகளையே தழுவிவந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது 'கை' சின்னத்தையும் தியாகம் செய்து 'பொதுஜன முன்னணி' என்ற பெயரால் அமைத்த கூட்டணி ''கதிரை'' யைப் பெற்றுக் கொண்டுவிட்டது. இந்தத் தேர்தலின் மற்றுமொரு முக்கிய அம்சம் ஆகும். மேல் பாகவும் வித்தியாசமான ஆனால் தீவிரமான கருத்துக்களைக் கொண்டிருப்பவராகக் கருதப்படும். திருமதி சந்திரிகா ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருப்பதும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

எது எவ்வாறாயினும் சிறிலங்காவின் ஏழு மாகணங்களிலும் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் தென்னிலங்கையில் அரசியல் உறுதிப்பாடு குறுகிய எதிர்காலத்திற்கு நிலவாது என்பதைக் கட்டியம் கூறப்போதுமானதாகும்.

# மேற்காசிய பேச்சுக்களில் இந்தியா பங்காற்ற முடியும்

**- நரசிம்மராவ்**

(டில்லி)

இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாலும், அரபு நாடுகளுடன் இந்தியா நீண்டகாலமாகவே நல்லுறவைப் பேணி வருவதாலும், பாலஸ்தீனியர்களின் கோரிக்கைக்கு கொள்கை ரீதியான ஆதரவை இந்தியா காட்டி வருவதாலும் மேற்காசிய சமாதானப் பேச்சுக்களில் இந்தியா ஆக்கபூர்வ பங்காற்ற முடியும் என்று நம்புவதாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம் மாலை தம்மைச் சந்தித்த இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமான் பெரசிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தச் சந்திப்பின் மூலம் மேற்காசிய சமாதானப் பேச்சுக்கள் குறித்து புதியதோர் ஊக்கம் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## சிறையில் உள்ளோர் பற்றி பரிசீலனை செய்யப் பணிப்பு

(டில்லி)

அயோத்தியா சம்பவங்களுக்குப் பின்னர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான வழக்குகளை மீளாய்வு செய்ய வேண்டுமெனப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் பணிபுரை விடுத்துள்ளார். இப்படிக் காவலில் வைக்கப்பட்டிருப்போரில் கடுமையான குற்றங்களைப் புரிந்திருப்போரைத் தனியாகவும், இலேசான குற்றங்கள் அல்லது தடுப்பு நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டிருப்போரைத் தனியாகவும் விசாரிக்க வேண்டுமெனவும், இலேசான குற்றங்களுக்காக அல்லது, தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டிருப்போர் விடுவிக்கப்படலாம் எனவும் பணிக்க பட்டுள்ளது.

1991 ஆட்சி கவிழ்ப்பு முயற்சி

## வழக்கு விசாரணைகள் மாஸ்கோவில் ஆரம்பம்

(மாஸ்கோ)

1991ஆம் ஆண்டுச் சதியில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பன்னிரண்டு பேர்களுக்கு எதிரான விசாரணை நேற்று முன் தினம் மாஸ்கோவில் ஆரமபமாகியது.

முன்னாள் சோவியத் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், பிரதி ஜனாதிபதி மற்றும் கே. ஜி. பி. பிரதம அதிகாரி ஆகியோரும் சதிகுற்றம் சாட்டப்பட்ட பன்னிரண்டு பேரில் அடங்குவர்.

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகாலவரையறையின்றி பின்போடப்பட்டது.

நிக்கலோய் கொர்பர்சேவ் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்த குற்றத்துக்காக இவர்களுக்கு எதிராகத் சதிக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மாட்றிட் ஒப்பந்தம் பற்றி டென்மார்க்கருத்துக் கணிப்பு

(கொப்பன்ஹேகன்)

ஐரோப்பிய ஐக்கியம் தொடர்பான மாட்றிட் ஒப்பந்தம் குறித்து நேற்று டென்மார்க் மக்கள் வாக்களித்தனர்.

முதலாவது கருத்துக்கணிப்பு வாக்களிப்பில் சிறு பெரும்பான்மை வாக்குகளை ஐரோப்பிய ஐக்கியத்துக்கான மாட்றிட் ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

## புதிய நியமனம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் தெற்காசிய விவகாரங்களைக் கையாள்வதற்கான உதவி வெளிநாட்டு அமைச்சராக ரொபின் குல் ராகுல் என்பவரை நியமித்துள்ளார். இவர் இந்தியாவில் இருக்கும் அமெரிக்கத் தூதுவரகத்தில் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகராக தற்போது பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது எழுபதுகளில் அமெரிக்க வெளிநாட்டு சேவையில் சேர்ந்து கொண்ட இவர் பாகிஸ்தானில் யு. எஸ். எயிட் நிறுவனத்தில் பொருளாதார ஆலோசகராகவும் மத்திய கிழக்கிலும் மற்றும் தெற்காசிய, கிழக்காசிய பகுதிகளுக்கான அரசியல் அதிகாரியாகவும், தென் ஆபிரிக்க விவகாரங்களுக்கான ஆலோசகராகவும் பணி புரிந்துள்ளார்.

மாகாணசபைத்தேர்தலில்

## எந்தநிர்பந்தமும்இருந்ததை காண முடியவில்லை

**– பிரிட்டன் எம்.பி**

[கொழும்பு]

ஒரு கட்சி வேட்பாளருக்கு ஆதரவு அளிக்கும்படி எவரும் எவரையும் நிர்ப்பந்தித்ததைக் காண முடியவில்லை என்று பிரிட்டன் தொழிற் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் சர்வதேச கண்காணிப்பாளர் குழுவில் இடம் பெற்று அநுராதபுரம் மாவட்டத்தில் தங்கியிருந்தவருமான ரொம் ஹோக்ஸ் கூறியுள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த அவர் மேலும் கூறுகையில்: கணவன் மனைவியருக்கு இடையில் கூட இத்தகைய நிர்ப்பந்தம் எதுவும் இருந்ததைக் காண முடியவில்லை எனவும் குறிப்பிட்டார். எவரும் எவரையும் ஆதரிக்கக் கூடியவகையில்சுதந்திரமான நிலை இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## முன்னாள் எம்.பிக்கு எதிராக 24 புகார்கள் பதிவு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களின் போது கேகாலை மாவட்டத்தில் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக சுமார் இருபத்துநான்கு புகார்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அசம்பாவிதங்கள் எதுவும் தேர்தலன்று நிகழவில்லை

கடந்த திங்களன்று நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களின் போது எந்த அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை யென்றும் தேர்தல்களை கண்காணிக்க வென வந்திருந்த சர்வதேச கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்தோரின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

## தேர்தலில் ஆள்மாறாட்டம் பதினெட்டுப்பேர் கைதாகினர்

தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்ததான குற்றச்சாட்டின்கீழ் பதினெட்டுப்பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பேருவளை, களுத்துறை, அளுத்கம, பயாகர ஆகிய இடங்களில் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்ய முயன்றதாக பத்துப்பேரும் காலி, அம்பலாங்கொட பகுதிகளில் ஆள்மாறாட்டம்செய்து வாக்குப் பதிய முயன்றதாக எட்டுப்பேரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்,

## விபரங்கள் சேகரிப்பு

வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து இயங்கும் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியரல்லாத ஊழியர்களின் விபரங்களை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் பிரதேச கல்வித் திணைக்களம் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும் கேட்டுள்ளது.

இவ்விபரத்தில் இடம்பெயர்ந்து இயங்கும் பாடசாலைகளின் பெயர், அது தற்போது இயங்கிவரும் இடம், ஆசிரியரல்லாத ஊழியர்களின் பெயர் பதவி போன்ற விடயங்கள் கேட்கப்பட்டுள்ளன.

# ஈழநாதம்

பத்மநாபா கொலை வழக்கு

## தடுப்பு காவல் கைதிகளுக்கு சிவராசன் நாட்குறிப்பு பிரதி

(சென்னை)

பத்மநாபா கொலையுண்டமை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு சிவராசனின் நாட்குறிப்பின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டு வெடிப்பு தொடர்பாக தேடப்பட்ட சிவராசன் பெங்களூரில் மரணமடைந்தது தெரிந்ததே.

பத்மநாபா கொலை வழக்கு விசேட நீதிமன்றத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற போது இந்த நாட் குறிப்பு பிரதிகள் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐதரசன் வாயுவில் இயங்கும் மோட்டார் சைக்கிள்

இந்தியாவில் கண்டு பிடிப்பு

ஐதரசன் வாயுவினால் இயங்கும் மோட்டார்சைக்கிள் ஒன்றை பனாரா இந்தி பல்கலைக்கழக விஞ்ஞானி ஒருவர் உருவாக்கியுள்ளார்.

இம் மோட்டார் சைக்கிள் மணிக்கு ஐம்பது கிலோமீற்றர் தூரம்ஓடக்கூடியது. இதனால் இந்திய அரசு வாகனங்களுக்காக பெற்றோலுக்கு செலவிடும் கோடிக்கணக்கான ரூபாவை மிச்சப்படுத்த முடியுமென அந்த விஞ்ஞானி கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

## காபூலில் கடும் சண்டை ஆஸ்பத்திரிகளில் நெருக்கடி

ஆப்கான் தலைநகர் காபூல் நகரில் கடும் சண்டைகள் நடப்பதால் ஆஸ்பத்திரிகளில் சன நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. தலைநகர் காபூலில் இருக்கும் ஐந்து பிரதான ஆஸ்பத்திரிகளிலும் அனுமதிக்கப்பட்டிருப்போரின் எணணிக்கை அளவுக்கு அதிகமாகி இருப்பதைத் தொடர்ந்து தரையிலும் விறாந்தைகளிலும் கூட காயப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் நடந்த சண்டையில் மட்டும் முப்பத்தைந்துபேர் கொல்லப்பட்டிருப்பதோடு நூற்றியிருபத்தைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக நீடித்துவரும் சண்டைகளில் சுமார் 3200க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாகவும், 600க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### நாகரத்தினம் தவேந்திரன்

(ஓய்வூதியர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்)

வறுத்தலை விளானைச் சேர்ந்த நாகரத்தினம் தவேந்திரன் 19-05-93 அன்று காலமாகிவிட்டார். இவர் ஈழவிழாவதியின் அன்புக் கணவரும், யசோதரன், திருஅருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் உருக்குமணி தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-05-93 அன்று அராலி மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## அரச தரப்பு சாட்சியம் காவலிலிருந்து தப்பி ஓட்டம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் அரச தரப்பின் முக்கிய சாட்சியான இலங்கைத் தமிழரான சார்ள்ஸ் நவாஸ் காவலில் இருந்து தப்பியோடிவிட்டார்.

சென்னை சைதாப்பேட்டை தனி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நவாஸ் நேற்று முன்தினமிரவு சிறையிலிருந்து தப்பிச்சென்றார் என தெரிவிக்கப்படுகிறது. இவர் சிறையின் சுவரைத்தாண்டி தப்பியிருக்கலாம் அல்லது மேற்கூரையைப் பிரித்து அதனூடாக தப்பியிருக்கலாம் என பொலிசார் தெரிவித்தனர்.

இவர் முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் என்றும் தமிழக பொலிசார் கூறினர் சார்ள்ஸ் நவாஸ் எப்படி தப்பிச் சென்றிருக்க முடியும் என்பதை முழுமையான ஒரு விசாரணையின் பின்னரே தீர்க்கமாக முடிவு செய்யமுடியும் என தமிழக பொலிசார் குறிப்பிட்டதாக சிறப்பு புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கூறினர்.

செய்தியாளர் மாநாட்டில்

## ஹேரத்

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டை புதிய அமைச்சரவைப் பேச்சாளரான வெளிநாட்டமைச்சர் ஹரல்ட் ஹேரத் நேற்று நடத்தினார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் முன்னைய அமைச்சரவைப் பேச்சாளரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அமைச்சர் ஹேரத்துடன் உடனிருந்தார்.

## விடுதலைப் புலிகள் தொடர்பை கடிதங்கள் நிரூபிக்கின்றன

### ராஜீவ் கொலைவழக்கில் அரசதரப்பு வக்கீல்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முக்கியமாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு எழுதிய ஐந்து கடிதங்கள் இக் கொலையில் புலிகளுக்கு தொடர்பு உண்டு என்பதை நிரூபிப்பதாக அரச தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கொலை வழக்கு நேற்று பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, இதன் போது அரசதரப்பில்வாதிட்ட வழக்கறிஞர் ஜேக்கப் டானியல், கொலையாளி தணுவும், குற்றஞ்சாட்டப்பட்டசுபாவும் மகளிர் பிரிவு தலைவி சகிலாவிற்கும் புலிகளின் புலனாய்வுத் தலைவர் பொட்டுஅம்மானுக்கும் இக்கொலையைச் செய்து முடிப்பதாக உறுதி தெரிவித்து 1991இல் கடிதம் எழுதியதாகக் கூறினார்.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் அவ்வாண்டு மே7ஆம்திகதி கூட்டத்தில் கலந்துகொண்டபோது தாங்கள் ஒத்திகை பார்த்ததையும் தமது கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டதாக அரச வழக்கறிஞர் கூறினார்.

புலிகளின் ஆதரவாளரான பாக்கியநாதன் புலிகளின் தலைவர்களுள் ஒருவரான பேபி சுப்பிரமணியத்திற்கு எழுதிய கடிதமும் புலிகளின் ஆதரவாளர் இரும்பொறையிடம் இருந்து மீட்கப்பட்ட இரண்டு கடிதங்களும் ராஜீவ் கொலையில் ஒவ்வமைப்பிற்கு தொடர்பு உண்டு என்பதை நிரூபிப்பதாக அவர் கூறினார்.

ஹரிபாபு, ராஜீவ் கொல்லப்படமுன் எடுத்த புகைப்படங்களும் கொலையில் புலிகளுக்கு தொடர்பு உண்டு என நிரூபிப்பதாகவும் டானியல் கூறினார்

நேற்றைய விசாரணையின் போது முருகன் தவிர்ந்த மற்ற அனைத்துக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் வழக்கில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி சித்தீக் வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வீரவணக்கக் கூட்டம்

5-ஆம் மாதங்களில் (மே மாதம) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தென்மராட்சிக் கோட்டத்தின் சாவகச்சேரி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றுஇரவு 8.30மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்களான செல்வி சுபைதா, திரு. கலையரசன், திரு தேவர் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

[90]

## அமைச்சர்களை நீக்கியது ஊழலை மறைக்கும் முயற்சி

– வாழப்பாடி ராமமூர்த்தி

[சென்னை]

முதலமைச்சர் ஜெயலலிதா தனது மூன்று அமைச்சர்களை நீக்கியிருப்பது மாநில அரசு எல்லா முனையிலும் தோல்வி அடைந்திருப்பதையும் மாநிலத்தில் ஊழல் மலிந்திருப்பதையும் மறைக்க எடுக்க[ப்பட்ட]டும் நீக்கியிருப்பதை விட மொத்த அமைச்சரவையையே பதவி விலக்கியிருக்க வேண்டும் என அவர் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

அமைச்சரவைமேலும் விரிவுபடுத்தப்பட்டிருப்பது ஏற்க

## பரிசளிப்பு விழா

(தொல்புரம்)

யாழ். தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியள

## கம்உதாவ ரத்தாகியது

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் 23ஆம் திகதி முதல் ஜூலை 3ஆம் திகதி வரை நடைபெறவிருந்த கம்உதாவ கொண்டாட்டங்கள் அரசினால் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பிரேமதாசாவிற்கு அனுதாபம்தெரிவித்தே இக்கொண்டாட்டங்கள் ரத்துச் செய்யப்படுவதாக நேற்று அமைச்சர் சிறிசேன கூரே அமைச்சரவையில் அறிவித்தார்.

## சிறையிலிருந்து தப்பியமை சந்தேகம் தருகிறது

பாலசுப்பிரமணியம் தெரிவிப்பு

(சென்னை)

சைதாப்பேட்டை சிறையில் காவலில் இருந்த புலிகள் உறுப்பினர் தப்பியோடிவிட்டமை அதிர்ச்சியைத் தருவதாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். இப்படிப்பட்ட கைதி தமிழக அரசின் கட்டுப்பாட்டில்உள்ள சிறையிலிருந்து மர்மமாக தப்பியிருப்பது பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே தமிழகத்தில் பல பகுதிகளில் கைதிகள் தப்பிச் சென்றிருப்பது மாநிலத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவல் அதிகமாக இருப்பதையே காட்டுகிறது. நவாஸ் இருந்த சிறை முழுக்க முழுக்க தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர் சி. பி. ஐ காவலில் இருந்ததாக வெளியான செய்தி தவறு, விசமத்தனமானது என்றும் பாலசுப்பிரமணியம் கூறினார்.

தமிழக அரசின் காவலில் இருந்து கைதிகள் தப்புவது சதித்திட்டத்தின் ஒரு பகுதியோ என சந்தேகப்படுவதாகவும் அவர் கூறினார். புலிகள் விடயத்தில் தமிழக அரசு மெத்தனம் காட்டுவது கண்டிக்கத்தக்கது. இப்போக்கிற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சிறிலங்காவில் ஜனநாயகம் வேரூன்றி உள்ளதாம்

டி பி. விஜயதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயகம் வேரூன்றி உள்ளது என்பதையும், மக்கள் தாம் விரும்பிய கட்சியை தெரிவு செய்யும் உரிமையை நிலைநாட்டியுள்ளதையும் நிரூபிப்பதாக மாகாணசபை தேர்தல் முடிவுகள் உள்ளன என ஜனாதிபதி விஜயதுங்க விடுத்த அறிக்கையில குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முடிவு பற்றி அவர் விடுத்த அறிக்கையில், ஆளும் கட்சி தெளிவான கொள்கையுடையது என்பதை மக்கள் தமது வாக்கு மூலம் நிரூபித்துள்ளனர். ஏழு மாகாணங்களில் ஆறு மாகாணங்கள் ஐ. தே. கவின் கட்டுப்பாட்டில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏயார் லங்கா

## இயக்குநர் சபைக்கு ஜே. ஆர். சிபார்சு இருந்ததா?

(கொழும்பு)

ஏயார்லங்கா நிறுவனத்தின் இயக்குநர் சபைக்கு ஜே ஆர். ஜெயவர்த்தனா எந்தவித சிபார்சையும் செய்யவில்லை என நேற்று பிரதமர் ரணில் மறுப்பு தெரிவித்தார்.

ஏயார்லங்கா நிறுவன இயக்குநர் சபை கலைப்பிற்கும், புதிதாக உறுப்பினர்கள் தெரிவாவதற்கும் ஜெயவர்த்தனா சில சிபார்சுகளைச் செய்தார் என்று வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிட்டார்.

## எழுதுவினைஞருக்கு

எண்ணிக்கை அளவுக்கு அதிக மாகி இருப்பதைத் தொடர்ந்து தரையிலும் விறாந்தைகளிலும் கூட காயப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் நடந்த

மானோர் காயமடைந்திருப்பதாகவும், 600க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## நாகரத்தினம் தவேந்திரன்

(ஓய்வூதியர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்)

வறுத்தலை விளானைச் சேர்ந்த நாகரத்தினம் தவேந்திரன் 19-05-93 அன்று காலமாகிவிட்டார். இவர் ஈழவிழாவதியின் அன்புக் கணவரும், யசோதரன், திருஅருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் உருக்குமணி தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-05-93 அன்று அராலி மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

தற்போதைய முகவரி:
மே/பா, நா. கனகம்மா,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி.

(4919)

## திருமதி மாரிமுத்தம்மா சிவகடாட்சம்

அளவெட்டி வடக்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த மாரிமுத்தம்மா சிவகடாட்சம் 19-05-93 அன்று காலமானார். இவர் ஓய்வுபெற்ற அரசினர் ஆயுர்வேத வைத்தியர் செ. சிவகடாட்சம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரகுமார், சூரியகுமார், விஜயகுமாரி, இராஜகுமாரி, பாலகுமார், புஸ்பகுமாரி, மீனாகுமாரியின் அன்புத் தாயாரும், செல்வராணி, பத்மினிதேவி, பரமநாதன், மகேஸ்வரன், ஞானேந்திரா, கணேஸ் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். இறுதிக்கிரியைகள் இன்று வியாழன் [20-05-93] நண்பகல் நடைபெறும்.

செபமாலை மாதா கோவிலடி,
உடுவில் கிழக்கு,

தகவல்:
சி. பாலகுமார்
(மகன்)

(4924)

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கு, பிரபல வர்த்தகர் அப்பையா இராசநாயகம் 14. 05. 93இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20. 05.93 வியாழக்கிழமை (இன்று) காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சற்குருநாதன்
ஐங்கரன் அரிசி ஆலை
இணுவில்.

இ. மயூரநாதன் (மகன்),
இ. சிவகுருநாதன் (மகன்),
அ. பற்குணம் (மருமகன்),
அ. செல்வநாயகம் (சகோதரன்.)

(4911)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 20 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வழக்கறிஞர் ஜேக்கப் டானியல், கொலையாளி தணுவும், குற்றஞ்சாட்டப்பட்டசுபாவும் மகளிர் பிரிவு தலைவி சகிலாவிற்கும் புலிகளின் புலனாய்வுத் தலைவர் பொட்டுஅம்மானுக்கும் இக்கொலையைச் செய்து முடிப்பதாக உறுதி தெரிவித்து 1991இல் கடிதம் எழுதியதாகக் கூறினார்.

முன்னாள் பிரதமர் வி. பி. தொடர்பு உண்டு என்பதை நிருபிப்பதாக அவர் கூறினார்.

ஹரிபாபு, ராஜீவ் கொல்லப்படமுன் எடுத்த புகைப்படங்களும் கொலையில் புலிகளுக்கு தொடர்பு உண்டு என நிருபிப்பதாகவும் டானியல் கூறினார்

நேற்றைய விசாரணையின் போது முருகன் தவிர்ந்த மற்ற அனைத்துக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் வழக்கில் ஆஜ

## அமைச்சர்களை நீக்கியது ஊழலை மறைக்கும் முயற்சி

– வாழப்பாடி ராமமூர்த்தி

[சென்னை]

முதலமைச்சர் ஜெயலலிதா தனது மூன்று அமைச்சர்களை நீக்கியிருப்பது மாநில அரசு எல்லா முனையிலும் தோல்வி அடைந்திருப்பதையும் மாநிலத்தில் ஊழல் மலிந்திருப்பதையும் மறைக்க எடுத்த முயற்சியாகும் என தமிழக காங்கிரஸ் தலைவர் வழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

மூன்று அமைச்சர்களை மட்டும் நீக்கியிருப்பதை விட மொத்த அமைச்சரவையையே பதவி விலக்கியிருக்க வேண்டும் என அவர் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

அமைச்சரவைமேலும் விரிவுபடுத்தப்பட்டிருப்பது ஏற்கனவே மாநிலத்தில் உள்ள ஊழலை அதிகரிக்கவே செய்யும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

UNIKCO COMPUTER CENTRE

- dBASE III PLUS and MS-DOS
- WORD PROCESSING (WORD STAR REL 5 . 5) AND—MS—DOS
- LOTUS 1-2-3 and MS - DOS

ஆரம்பம்: 23-05-93 (சனி, ஞாயிறு)
25-05-93 (செவ்வாய், வியாழன்)

★ செய்முறைப் பயிற்சிகள் தினமும் காலை 10-00 மணி தொடக்கம் மாலை 6-30 வரை உங்கள் வசதிக்கேற்ப செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
UNIKCO COMPUTER CENTRE
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி 6650)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 19-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9484

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-2056, 26-1169, 41-9396, 24-5437, 27-1939
24-4992, 28-2156, 41-0976, 24-2680, 27-1292
27-4630, 42-0849.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3183, 41-8081, 26-4450, 26-6811.

களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றுஇரவு 8.30மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்களான செல்வி சுபைதா, திரு. கலையரசன், திரு தேவர் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

[90]

## பரிசளிப்பு விழா

(தொல்புரம்)

யாழ். தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. வி. ந. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு.கா. சந்திரபாலன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் சி. கீரன் அண்ணாவும், முன்னாள் அதிபர் திரு.க தர்மரத்தினம் தம்பதியரும் கலந்து கொள்ளவுள்ளனர் என பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. கி. மகேந்திரம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

### கேளிக்கைகளை

வங்களாக கொண்டாடுவது நிறுத்தப்படும். அமைச்சுகளின் நடவடிக்கைகள் அவதானிக்கப்படும். அமைச்சர்களே தமது நடவடிக்கைகளுக்கு முழுப்பொறுப்பாக இருப்பர். நிர்வாகத்தில் ஒழுக்கம் காணப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி தனது முதலாவது கொள்கை விளக்க அறிக்கையில் குறிப்பிட்டார்.

### வாகனம்

ஏறியதால் மூளை சிதறி மரணமானதாகவும் இது விபத்து மரணம் எனவும் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா தீர்ப்பு வழங்கினார். (யோ)

### வட பகுதி தபால்

குடாநாட்டுக்கான தபால் பொதிகள் தொடர்ந்தும் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றது (க), (யோ)

### 4 வயோதிபப்

வரப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் நால்வரும் நோயாளிகளாவர். (யோ)

உரிமையை நிலைநாட்டியுள்ளதையும் நிருபிப்பதாகமாகாணசபை தேர்தல் முடிவுகள் உள்ளன என ஜனாதிபதி விஜயதுங்க விடுத்த அறிக்கையில குறிப்பிட்டுள்ளார்.

துள்ளனர். ஏழு மாகாணங்களில் ஆறு மாகாணங்கள் ஐ. தே. கவின் கட்டுப்பாட்டில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஏயார் லங்கா

## இயக்குநர் சபைக்கு ஜே. ஆர். சிபார்சு இருந்ததா?

(கொழும்பு)

ஏயார்லங்கா நிறுவனத்தின் இயக்குநர் சபைக்கு ஜே ஆர். ஜெயவர்த்தனா எந்தவித சிபார்சையும் செய்யவில்லை என நேற்று பிரதமர் ரணில் மறுப்பு தெரிவித்தார்.

ஏயார்லங்கா நிறுவன இயக்குநர் சபை கலைப்பிற்கும், புதிதாக உறுப்பினர்கள் தெரிவாவதற்கும் ஜெயவர்த்தனா சில சிபார்சுகளைச் செய்தார் என்று வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிட்டார்.

## எழுதுவினைஞருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் தற்போது கடமையில் இருக்கும் தற்காலிக எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனினும் குடாநாட்டில் இயங்கிவரும் அரச திணைக்களங்களில் தற்போது எழுதுவினைஞர் சேவையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்பவே இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி நிரந்தர நியமனம் தொடர்பான கடிதம் மிக விரைவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (க)

## இ. தொ. கா.எதிர்ப்பாளருக்கு நல்லதொரு பாடம்

- தொண்டமான்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கு செல்வாக்கு இல்லை என்று கூறுவோருக்கு இத்தேர்தல் முடிவுகள் ஒரு தகுந்த பாடமாகும் என்று இ, தொ. கா. தலைவரும், உல்லாசப்பயணகைத் தொழில்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்திய வம்சாவழி மக்கள் செறிந்து வாழும் இடங்களிலெல்லாம் ஐ தே. கவிற்கு ஐம்பது சதவிகித ஆதரவு கிடைத்துள்ளது என்பது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கோரிக்கையை ஏற்று மக்கள் தமது ஒன்றுபட்ட சக்தியைக் காட்டியுள்ளனர் என்பதை தெளிவாக்குகிறது.

அத்துடன் இ. தொ. கா மலையக மக்கள் மத்தியில் மட்டுமன்றி இலங்கை அரசியலிலும் தனித்துவமான செல்வாக்கு மிக்கசக்தி என்பதை தேர்தல் முடிவு புலப்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

### எதிர்க்கட்சிகள்

முதலமைச்சரை ஆட்சியிலிருந்து நீக்கி எதிரணிகள் அங்கு ஆட்சியை அமைக்க முடியும் என டெய்லி நியூஸ் பத்திரிகையின் செய்தியாளர் மனித்த சில்வா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் சிறிலங்காவின் அரசியலமைப்பில் மேற்கண்ட நடைமுறை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது என்றார்.

### கிராமசேவையாளர்

மேலதிகமாக பொலிஸ் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு கோரியுள்ளது. இதைத் தொடர்ந்தே இந்த நிலை உருவாகியுள்ளது. மேற்படி நிலை காரணமாகவே நியமனம் வழங்குவது தாமதமாகிவருகிறது.

குடாநாட்டில் பொலிஸ் அறிக்கை பெற முடியாமையால் மாற்று ஏற்பாடுகள் குறித்து மாகாணசபை அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)